10439

B

# முதல் திருப்புதல் தேர்வு - 2024

## பத்தாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி தமிழ் மதிப்பெண்கள் : 100

பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15×1=15

1) எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
அ) எந்+தமிழ+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

2) "பெரிய மீசை" சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத் தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

3) 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

4) 'குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்' என்று கூறுவது
அ) கால வழு ஆ) கால வழாநிலை இ) கால வழுவமைதி ஈ) மரபு வழு

5) நூறு செயல்களை ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் செய்து காட்டுபவர்
அ) தசாவதானி ஆ) சதாவதானி இ) ஆசுகவி ஈ) சித்திரக்கவி

6) வரகு, சாமை ஆகிய உணவுப் பொருள்கள் எவ்வகைத் திணைக்குரியவை?
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

7) சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க
அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

8) சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

9) தமிழில் தோன்றிய முதல் அகராதி நூல்
அ) வின்சுலோ ஆ) தமிழ்ப் பேரகராதி இ) சதுரகராதி ஈ) அபிதான கோசம்

10) "காலின் ஏழடிப் பின் சென்று" என்னும் பொருநராற்றுப்படை உணர்த்தும் செய்தி
அ) விருந்தினரின் காலைத்தொட்டு வணங்கினர்
ஆ) விருந்தினரை ஏழு அடி வரை நடந்து சென்று வழியனுப்பினர்
இ) எழுவர் விருந்தினரின் பின் சென்று வழியனுப்பினர்
ஈ) ஏழு நாட்கள் விருந்தளித்துப் பின் விருந்தினரை வழியனுப்பினர்

11) "நாற்றிசையும் செல்லாத நாடில்லை"
"ஐந்துசால்பு ஊன்றிய தூண்" - இந்தச் செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள எண்ணுப் பெயர்களையும், அவற்றிற்கான தமிழ் எண்களையும் தேர்க.
அ) நான்கு, ஐந்து - ச,ரு ஆ) மூன்று, நான்கு - ங, ச
இ) ஐந்து, ஏழு - ரு, எ ஈ) நான்கு, ஆறு - ச, சா

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று"


Scanned with CamScanner

12) இப்பாடல் இடம்பெற்ற நூல்
அ) நீதிவெண்பா ஆ) புறநானூறு இ) வெற்றிவேற்கை ஈ) கொன்றைவேந்தன்

13) பாடலின் சீர் மோனைச் சொற்கள்
அ) அருளை, அருந்துவதும் ஆ) அருளை, அறிவை
இ) அகற்றி, அருந்துணையாய் ஈ) அறிவை, அகற்றி

14) அருந்துணையாய் இச்சொல்லைப் பிரித்தால்
அ) அருமை + துணையாய் ஆ) அருந்துணை + தாய்
இ) அரு + துணையாய் ஈ) அருந்து + துணையாய்

15) உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது
அ) அன்பு ஆ) கல்வி இ) மயக்கம் ஈ) செல்வம்

பகுதி - II (மதிப்பெண்கள் - 18)

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- 4×2=8
21-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.

16) விடைக்கேற்ற வினா அமைக்க
அ) மேற்கிலிருந்து வீசும் காற்று "கோடை" எனப்படுகிறது
ஆ) ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

17) தமிழ்நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறுகூலங்களின் பெயர்களை எழுதுக.

18) 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

19) வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

20) குறிப்பு வரைக: அவையம்

21) 'விடல்' எனத் முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்:- 5×2=10

22) சந்தக் கவிதையில் உள்ள பிழைகளைத் திருத்துக.
"தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுணர்ந்தின் புருவோமே"

23) இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக
அ) தொடு - தோடு ஆ) விதி - வீதி

24) அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

25) கலைச்சொற்கள் தருக.
அ) Modern Literature ஆ) Emblem

26) குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக. (எதிர்மறைச் சொற்கள்)
அ) கொடுத்துச் சிவந்த ஆ) மறைத்துக் காட்டு

27) மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
அ) பசுமரத்தாணிப் போல ஆ) குன்றின் மேலிட்ட விளக்கு போல

28) புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

Scanned with CamScanner

## பகுதி -III (மதிப்பெண்கள்:18)

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி:- 2×3=6

29) "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

30) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர்புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

அ) போர் அறம் எனபது எவற்றைக் குறிக்கிறது?

அ) ஆவூர் மூலங்கிழார் போர் அறம் குறித்து குறிப்பிடுவது யாது?

இ) போரில் யாருக்கெல்லாம் தீங்குவராமல் போர்புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன?

31) வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு மட்டும்:- 2×3=6

32) "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக?

33) "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது" - என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

34) அடிபிறழாமல் எழுதுக.

அ) "அன்னை மொழியே" எனத் தொடங்கும் பெருஞ்சித்திரனார் பாடல் **(அல்லது)**

ஆ) மாற்றம் எனத் தொடங்கி "அட்சய பாத்திரம்" என முடியும் காலக்கணிதப் பாடல்

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்:- 2×3=6

35) கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழுப்பு!
மாமழை பெய்கையிலே!
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு! - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக

36) வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

37) "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி -IV (மதிப்பெண்கள்- 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:- 5×5=25

38) அ) மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. **(அல்லது)**

ஆ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

39) அ) ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உறவினருக்கு முக்கியச் சாலை விதிகளை அவற்றைக் கடைபிடிக்க வலியுறுத்திக் கடிதம் ஒன்று எழுதுக. **(அல்லது)**

ஆ) உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுதுபட்ட சாலைகளைச் சீரமைத்தும், பழுதடைந்த மின்கம்பங்களைச் சரிசெய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

Padasalai.Net



Scanned with CamScanner

www.Padasalai.Net www.TrbTnpsc.com



40) காட்சியை கண்டு கவினுறு கவிதை ஒன்றை எழுதுக.



41) கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க. (உ.நு.ப.எண். 119B) திருச்சி மாவட்டம், முகில் நகர், மறையோன் வீதி, 45-ஆம் இலக்க வீட்டில் திருவானைக்காவல் நகரில் குடியிருக்கும் கிள்ளி வளவன் மகன் தமிழ்வேந்தன் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று அதே பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலை வகுப்பு சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை தமிழ்வேந்தனாகக் கருதி கொடுக்கப்பட்ட சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42) அ) தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி, திறன்பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை, காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன், எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி. இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்கவும்:-

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The Milky clouds start their wandering. The colourful birds starts twitting their morning melodies in percussion. The cure butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything plesant.

## பகுதி -V (மதிப்பெண்கள்- 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்:- 3×8=24

43) அ) வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல் - இவை போன்ற செயல்கள் அன்றும் இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பதை அழகுற விவரித்து எழுதுக. (அல்லது)

ஆ) சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களைக் குறிப்பிட்டு அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக

44) அ) கு. அழகர்சாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக. (அல்லது)

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் "கோபல்லபுரத்து மக்கள்" கதைப்பகுதி கொண்டு விவரிக்க

45) அ) நீங்கள் சென்ற வந்த அரசுப் பொருட்காட்சியில் அறிவிப்பு, சிறுஅங்காடிகள், நிகழ்த்தப்பட்ட கலைகள், பேச்சரங்கம், அரசின் நலத்திட்டங்கள், குறித்து விளக்க அரங்குகள் போன்றவற்றைக் குறிப்புகளாகக் கொண்டு கட்டுரை ஒன்றை எழுதுக. (அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.

குறிப்புகள்:- முன்னுரை - சாலைப் பாதுகாப்பு - உயிர் பாதுகாப்பு - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிமுறைகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம்- முடிவுரை

****/****

Scanned with CamScanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com